**சொரணாதொட்ட பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சொரணாதொட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் சொரணாதொட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்

மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 168,211 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 5,637,184 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 11,387,351 | 96,169 | 55,329 | 40,840 | 4,947,724 | 97,905 | 56,314 | 41,591 |
| (ii) | வாடகை | 1,205,200 | 713,677 | 503,886 | 209,791 | 1,087,200 | 725,520 | 507,987 | 217,533 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,043,000 | 0 | 0 | 0 | 1,074,400 | 0 | 0 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,988,682 | 2,433,135 | 1,913,325 | 519,810 | 11,134,000 | 2,273,740 | 1,725,835 | 547,905 |
| | மொத்தம் | **25,624,233** | **3,242,981** | **2,472,540** | **770,441** | **18,243,324** | **3,097,165** | **2,290,136** | **807,029** |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒருவரிடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி ரூபா 159,417 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை கடை வாடகை மற்றும் நிலுவை கடை வாடகை தண்டப்பணம் ரூபா 204,243 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிமையாளர்களை இனங்காண்பதற்கு முடியாமை மற்றும் இயற்கை அனர்த்தங்களின் காரணமாக அறவிடுவதற்கு முடியாதிருந்த வருமானங்களை பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாடகைகள் குறித்துரைத்த காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 234,305 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தில் ரூபா 112,987 பதிவழிப்பதற்கு கடை உரிமையாளர்கள் கோரியிருந்தனர். ஏனைய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,284,627 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024.03.31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம், முத்திரைக் கட்டணம் ரூபா 899,697 கிடைக்கப் பெற்றுள்ளது. | மேலும் காணப்படுகின்ற நிலுவை வருமானம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துன்ஹிந்த தியஎல்ல பார்வையாளர்கள் மேடைக்கு வருகை தருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணம் சபையின் பிரதான வருமான மூலமாக இருந்த போதிலும் பொது வசதிகளுடன் நிலையமொன்றுக்கு போதியளவான நீர் வசதிகள் காணப்படாமையினால் திய எல்ல பார்வையிடுவதற்கு வருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் சுகாதார வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வரிசை அமைச்சிலிருந்தும், (சுற்றுலா) மாகாண சபை நிதியேற்பாட்டில் இருந்தும் பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்தி முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன் உரிய நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் உரிய வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றுலா பிரயாணிகளுக்கு தேவையான வசதிகளை நிறைவேற்றக் கூடிய வகையில் பொது வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் தியஎல்ல இனை பார்வையிடுவதற்கு வருகின்ற சுற்றுலா பிரயாணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் நுழைவு வீதியில் இருந்து தியஎல்ல வரையான வீதியில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற இடங்களில் வேலிகளை நிர்மாணித்தல், வீதியின் நேரே காணப்படுகின்ற உக்கிய மரங்களை அகற்றுவதற்கும் மற்றும் வீதியின் இரு பக்கங்களிலும் நடமாடி திரிகின்ற குரங்குகள் சுற்றுலா பிரயாணிகளுக்கு ஏற்படுகின்ற இடையூறுகள் தொடர்பான வன குற்றங்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றுலா பிரயாணிகளின் பாதுகாப்பிற்காக பொருத்தமான பாதுகாப்பு வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதி ரூபா 7,431,386 தீர்த்து வைப்பதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துவதற்கு இயலுமாகவுள்ள உறுதிச்சீட்டுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் ஏனைய மீதிகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற டெக்டர் வண்டி, டேலர், தண்ணீர் பௌஸர் மற்றும் லொறி நீர் பௌஸர் உரித்து என்பவற்றை மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரித்து சபைக்கு கையேற்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குரிய தண்ணீர் பௌஸர் 2019 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பாதுகாப்பின்றி சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலமையில் காணப்படுகின்ற சொத்துக்களை எதிர்காலத்தில் விற்றுத் தீர்ப்பதற்காக குழு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை உரியவாறு பராமரித்து பயன்படுத்துதல் வேண்டும். |